DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the court Judicial Magistrate At Oddanchatram
Case No : DVOP 10/2023
Petitioner Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வசிந்து | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சிவா | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act
Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 08/ 07/2025

1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) சிவா எனது கணவர் என்றால் சரிதான். வசந்தி எனது கணவரின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். சிவகாமி எனது மாமியார் என்றால் சரிதான். நான் எனது மனுவில் எதிர்மனுதாரரின் வீட்டில் உள்ள எனது நகைகள், உடைமைகள், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றை பெற்றுத் தருமாறு கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது உடனே எனது பொருட்களை பெற்றுத் தருமாறு மனு ஒன்றை கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். பின்னர் 1 ம் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்த எனது நகைகள், கல்விச் சான்றிதழ்கள், எனது துணிமணிகள் மற்றும் குழந்தைகளின் துணிமணிகள், கட்டில், பீரோ ஆகியவற்றை எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரரிடம் இருந்து எனக்கு எந்த பொருட்களும் வரவேண்டியதில்லை என்று எழுதி கொடுத்துவிட்டு பொருட்களை எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரிதான்.

2) திருமணத்தின்போது எனக்கு எனது கணவர் அணிவித்த மாங்கல்யம் என்ன ஆனது என்றால், எனக்கு தரவேண்டிய நகைகளுக்கு பதிலாக அதை கழித்துக் கொண்டு விட்டோம். என்னிடமிருந்து எனது கணவருக்கு சேர வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லை. சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் உள்ளதா என்றால் தனியாக வந்தால் சேர்ந்து வாழ தயார்.

(கற்றறிந்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.07.08 17:40:12 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 08/ 07/2025